my first skool

## எப்படி ஆரம்பித்தது



#learnwithmfs

கோவிட் கிருமித்தொற்றால் வெளிப்புற நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. மாணவர்களின் வாடிய முகங்களைக் கண்ட போதெல்லாம் நானும் வாடினேன். ஆமாம், தமிழ் மாணவர்களுக்காக வெளிப்புற நடவடிக்கையை நடத்த இன்னொரு ஆசிரியரை நியமிப்பது என்பது சாத்தியமல்ல என்பதை உணர்ந்தேன். என்னைப்போலவே, எனது சக மலாய் ஆசிரியரும் இச்சவாலை எதிர்நோக்குவதை உணர்ந்தேன். மொழி வேறாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் உதவலாம் என்ற எண்ணத்துடன் அவரை அணுகினேன். அவரும் இந்த யோசனைக்கு இணங்கினார். அவர் உடனே என்னுடன் இணைந்து பாடத்திட்டங்களை வடிவமைத்தார். இத்திட்டங்களின்வழி ஒரே நடவடிக்கையை மாணவர்கள் தத்தம் தாய்மொழிகளில் மேற்கொள்வர். என்னால் மலாய் மொழியைச் சரளமாகப் பேச முடியும் என்பதால் அவர்களிடமிருந்து நானும் கற்றுக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

my first skool



#learnwithmfs

**கற்றல் நோக்கங்கள்:**

**(நடவடிக்கை 1)**

1. மாணவர்கள் தமது தாய்மொழியில் ஆரோக்கியமான உணவுவகைகளின் பெயர்களையும் ஆரோக்கிமற்ற உணவு வகைகளின் பெயர்களையும் கண்டுபிடிக்கவேண்டும்.
2. மாணவர்கள் உணவுப்பொருள்களை ஆரோக்கியமான உணவுவகைகள் என்றும் ஆரோக்கியமற்ற உணவு வகைகள் என்றும் வகைப்படுத்தவேண்டும்.

#learnwithmfs




# உண்ணும் உணவைச் சரிபார்ப்போம்

**(நடவடிக்கை 1)**

my first skool

(நடவடிக்கை 1)

உணவு என்னும் கருப்பொருளின் தொடர் நடவடிக்கையாக இந்த வெளிப்புற நடவடிக்கையை மேற்கொண்டோம். மாணவர்கள் போட்டியில் வெற்றிப்பெற முதலில் உணவுப்பொருள்களை அடையாளம் காணவேண்டும். பிறகு, ஆரோக்கியமான உணவுகளையும் ஆரோக்கியமற்ற உணவுகளையும் அடையாளங்கண்டு அவற்றை வகைப்படுத்தவேண்டும். இதன்மூலம் போட்டித்தன்மை மேம்படுவதோடு அவர்களது மொழியறிவும் மேம்படும். இது *iTeach கோட்பாட்டின்படி, அர்த்தமுள்ள விளையாட்டின்வழிப் பிள்ளைகளைக் கற்றலில் ஈடுபடுத்துதல் ஆகும்.*

#learnwithmfs



#learnwithmfs

## கற்றல் நோக்கங்கள்:

**(நடவடிக்கை 2)**

1. மாணவர்கள் சீனப் புத்தாண்டைப்பற்றிப் புலன்சார் விளையாட்டுவழி (Sensory Play) அறிந்துக்கொள்வர்.
2. மாணவர்கள் சீனப் புத்தாண்டு தொடர்பான கலைச்சொற்களை அறிந்துக்கொள்வர்.
3. மாணவர்கள் அக்கலைச்சொற்களைப் பயன்படுத்தி உரையாடலைத் தொடங்க முயல்வர்.

my first skool

#learnwithmfs



# சீனப்புத்தாண்டைப்பற்றிய புலன்சார் விளையாட்டு

**(நடவடிக்கை 2)**

my first skool



#learnwithmfs

(நடவடிக்கை 2)

ஆங்கிலப் பாடங்களிலே பெரும்பாலும் புலன்சார் விளையாட்டுகள் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். அதனால் சீனப் புத்தாண்டு கொண்டாட்டத்தை மாணவர்களுக்குப் புலன் விளையாட்டுமூலம் அறிமுகப்படுத்தினேன். அதோடு அக்கொண்டாட்டத்தின்போது இடம்பெறும் முக்கிய தகவல்கள் தொடர்பான கலைச்சொற்களை அறிமுகப்படுத்தினேன். அச்சொற்கள் மாணவர்களின் பேசுதல் திறனை மேம்படுத்த உதவும் என்பதில் ஐயமில்லை. இதே நடவடிக்கைகளை மலாய் மாணவர்கள் தமது தாய்மொழியைப் பயன்படுத்தி ஈடுபட்டபோது, *"அந்த ஆரஞ்சை இங்கே தா!", "உணவுக்குச்சி எங்கே உள்ளது?" "Kasih saya oren itu!" , "Saya nak ang bao Tahun Baru Cina!"* என்று அவர்கள் பேசுவதைக் கேட்டபோது எனக்கு மற்றற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. இது i*Teach கோட்பாட்டின்படி, தரமான இருவழிக்கருத்துப்பரிமாற்றம் வாயிலாக நம்பகமான கற்றல் நிகழுதல் ஆகும்.*

my first skool



#learnwithmfs

## கற்றல் நோக்கங்கள்:

**(நடவடிக்கை 3)**

1. மாணவர்கள் சமூக உதவியாளர்களைப்பற்றி அறிந்துகொள்வதோடு அவர்களை அடையாளங்காணுவர்.

2. மாணவர்கள் சமூக உதவியாளர்களுடன் அன்றாட உரையாடலைத் தாய்மொழியில் மேற்கொள்வர்.

my first skool

#learnwithmfs





# சமூக உதவியாளர்களைப் போற்றுவோம்

**(நடவடிக்கை 3)**

(நடவடிக்கை 3)

நாங்கள் பள்ளியைச் சுற்றி நடந்து, சமூக உதவியாளர்களைத் தேட ஆரம்பித்தோம்.

மாணவர்கள் அங்கிருந்த சமூக உதவியாளர்கள் சிலரை நோக்கிச் சென்றனர்.

மாணவர்கள் அவர்களிடம் "வணக்கம், எப்படி இருக்கிறீர்கள்?" "உங்கள் உதவிக்கு நன்றி!"

*Selamat Pagi pak cik, terima kasih untuk bersihkan sekitar kita!"* என்று கூறி அவர்களோடு பேச முயன்றனர்.

*இது iTeach கோட்பாட்டின்படி, பிள்ளைகள் தாமாகவே தம் அறிவாற்றலை உருவாக்கிக்கொள்ளுதல் ஆகும்.*

my first skool

# என்னைப்பற்றி



#learnwithmfs



வணக்கம்.

நான் பல வருடங்களாக ஆரம்பக்கால கல்வி நிலையங்களில் ஆங்கிலமொழியைக்  கற்றுக்கொடுத்து வந்தேன். இருப்பினும், என் தாய்மொழிக்குச் சேவை செய்ய என்றாவது வாய்ப்பு கிடைத்தால் அதை விட்டுவிடக்கூடாது என்ற ஆர்வம் என்னுள் மேலோங்கியிருந்தது. ஆங்கிலப் பாடத்தைப் போலத் தமிழ் பாடமும் சுவாரசியம் மிகுந்ததாக இருந்தால், மாணவர்களிடத்தில் அது வாழும்மொழியாக நிலைத்திடும் என்பதில் நான் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தேன். அதற்கான வாய்ப்பை My First Skool எனக்கு அளித்தது.

தமிழுக்கும் மாணவர்களுக்கும் தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் என்பதே என் அவா.